# அரங்கநாதன்

# திருமணி

# மாலை



பரிதிமதி

## முன்னுரை

யாதேவி ஸர்வ பூதேஷு தயாரூபேண ஸம்ஸ்த்திதா
ஓம் நமோ ஸ்ரீ வெங்கடேசாய நம:

படைத்தல், காத்தல், அழித்தல் என்ற முத்தொழில் கடவுளரில் காக்கும் கடவுள் வாஸுதேவன். காவிரிச்சூழ்த்தீவுத் திடலான திருவரங்கத்தில் பாற்கடலில் பள்ளி கொண்ட அரங்கநாதன். கர்நாடக மண்ணில் அதே காவிரி சூழ் ஸ்ரீரங்கப் பட்டிணம். அதே பாற்கடல் திருவரங்கன். திருக்கோவிலூர் அருகில் தென்பெண்ணை நதியில் ஒரு திருவரங்கம். கடல் மல்லையில் நீரேயில்லாத தலசயனப்பெருமாள். பள்ளிகொண்டா திருத்தலம். வடஆற்காடு மாவட்டத்தில் பாலாறு சுழித்தோடும் புண்ணிய நிலத்தில் அரவணையில் துயிலில் உள்ள திருவரங்கன். நூற்றியெட்டு வைணவத் தலங்களில் முதலிடம் எங்கள் திருக்கோட்டியூர் அரங்கன் பரமபதனாகி விளங்கும் திருத்தலம். கடைசியில் வருபவர் பத்ரிகாசிரமத்தில் பத்ரிநாராயணன். வேங்கடநாதனுக்கு எத்தனை அணிகலன்கள். இராமனாகி, கிருஷ்ணனாகி, பரசுராமனாகி, திரிவிக்கிரமனாகி, லட்சுமி நரசிம்மனாகி, மச்சம், கூர்மம், வராஹம் என்ற மிருகங்களின் உருவமாகி மண்ணில் அவதரித்த கோமான். வீரவிசயனை ஆட்கொள்ள பாஞ்ச சன்னியன் தர்மத்தை நிலைநாட்டியதை குருட்சேத்திர திருமண்ணில் பார்த்திருக்கிறோம். திருவல்லிக்கேணியில் பார்த்தனுக்குத் தேரோட்டிய பார்த்தசாரதியின் எழில்கோலம். சாந்தாகாரம், புஜகசயனம், பத்மநாபம், சுரேஷம் என்ற கோலத்தைக் கருத்தில் கொண்டு, அரங்கனை மனதில் பதித்து, எனது சிற்றறிவில் சில பாசுரங்களைப் புனைந்து அரங்கத்தம்மானுக்கு ஒரு திருமணிமாலையாக நான் அர்ப்பணிக்கிறேன்.

தொண்டரடிப்படி ஆழ்வார் அருளிய

பச்சைமா மலைபோல்மேனி பவளவாய்க் கமலச்செங்கண்
அச்சுதா அமரரேறே ஆயர்தம்கொழுந்தே என்னும்
இச்சுவை தவிரயான்போய் இந்திரலோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்அரங்க மாநகருளானே.

என்ற செய்யுளின் உணர்ச்சிகளையே நான் அடைந்தது உண்மை. அரவணைக்கும் அரங்கமன்னன் வழிநடத்தி நான் எழுதிய பாடல்களில் உள்ள மணியான பதங்களில் வாஸுதேவனை உணரந்தால், அந்த எண்ணமே எனது உணர்வுகளுக்குச் சான்றாகும். இலக்கணப் பிழைகளை அரங்கன் மன்னித்து ஏற்றுக் கொள்வான் என்பது “பரிதிமதி” என்னும் இரவிச்சந்திரன் எனது உள்ளக் கேட்கை.

1. ஆதி அந்தமிலானை அரங்கத் தாள்வானை
மேவி வரமருளும் பூந்துழாய் மார்பனை
மேக வண்ண மானான் வாஸுதேவனை
போற்றித் துதிமினே மானுடத் தீரே.

2. அரவின் அரியணை மேல் துயிலுறும்
கொண்டல் வண்ணன் கோமள மேனியன்
வெண்ணெய் உண்ட குமுத வாயினை
போற்றித் துதிமினே மானுடத் தீரே.

3. திருப்பள்ளி கொண்ட அரங்கத் தானை
திருக் கோட்டியூர் மாநகர் உறையுத்தானை
மாட மாநகர் வேங்கடத் தானை
போற்றித் துதிமினே மானுடத் தீரே.

4. சங்கு சக்கரம் பொலியும் மேனியன்
நவில் தொறும் நூல்போற்ற வல்லான்
ஆழி துயில் அரங்கத் தம்மானை
சூழு லகம் முன்னின் றேத்துவனே.

5. பத்து அவதாரங் களில்பரி மளித்தோனை
சுத்து லகம்மூன் றினையும்சேர்த் தாண்டோனை
நர சிங்கமுகம் கொண்டுகர்ச் சித்தோனை
பர உலகம் வழிகண்டு ஏத்துவேனே.

6. இராம னாகிநல்ல தொரு வேந்தனாகி
கண்ண ணாகஅன் பருக்கு தாசனாகி
எல்லோர்க்கும் மனத் தளவில் இறைவனாகி
பல்லுயிரைப் புரந் தவனை ஏத்துவேனே.

7. அன்பால் மன்னுயிர் களை அணைத்தவனே
மென்சொலால் துயர் நீக்கி மிளிர்ந்தவனே
அரவணை யில்பள்ளி கொண்ட பெருமானே
மரபின்றி உனை நானே வாழ்த்துவனே.

8. பொன்மேவும் காவிரியின் சோலை மீதே
நீடுயர்ந்த மாடங்கள் சூழரங்க புரியில்
கார்வண்ணன் அரங்க நாதன்அர வணையில்
கண்காணா விந்தை யிதைஎன் னென்பேனே.

9. பதுமை நின்பொற் கரங்கள் பற்றினேனே
பொறுமை யில்மனம் நின்று யாசித்தேனே
நிலையில்லா நீர்க்குமிழி வாழ்க்கை நோக்கி
சிலையான உன்னுருவம் வேண்டி நின்றேனே.

10. சானகி மனமருள் கோசலை மைந்தா
மானச மலைதனில் பனிச்சிகர் அமரா
சோன மனோகர மங்கையர்க் கரசே
தானவர் தலைவா மேலவர் முதல்வா.

11. ஆண்டாள் தன்திருக் காப்புப் பாயிரத்துள்
வேண்டாள் தன்மெய்க் கருத்து மனதுஎல்லாம்
பூண்டாள் உன்திரு வடியைக் கருத்திலிட்டு
கொண்டாள் உனையே தன் மன்னனாக.

12. ஆண்டாளைக் கரம் பிடித்த ரங்கமன்னாரே
இலக்குமியை மார்பி லேந்தும் இலக்குமிநாராயணா
அநுதினமும் திருமணமாம் நித்திய கல்யாண
வெங்கடேசன் திருவடியே போற்றி போற்றி.

13. பாம்பணையில் துயில் கொண்ட பரமாபோற்றி
மேம்பட்ட பண்புடைய குருவே போற்றி
ஓங்கி உலகளந்த இறையே போற்றி
தேனனைய சொல்வல்லான் போற்றி போற்றி.

14. உலகாளும் உத்தமா நின்பாதம் போற்றி
மலம்மூன்றும் அகற்றியருள் இறைவா போற்றி
துவரகாபுரி உறைந்திருக்கும் கண்ண பிரானே
மதுராழ்வார் கனிமொழியைக் கவர்ந்த வேந்தே.

15. சக்கரத் தாழ்வான் துதிசெய் யென்நம்பி
சங்கத் தாழ்வான் போற்றும் அறிவுடைநம்பி
பெரிய திருவடி இருகரம் சுமந்த
சிறிய திருவடி பணிசெய் யரங்கனே.

16. செப்புகிறேன் அரசனாகி நீதி காப்பாய்
பற்றுகிறேன் உன்திரு வடியை பக்தனாகி
இச்செகத்தோர் பணிந்தேத்தும் இறையே ஐயா
மெச்சுகிறேன் நின் னருளை அரங்கனாரே.

17. அனுவரதப் பெருமனாய்த் திருக் காஞ்சியில்
உலகளந்த பெருமனாய்த் திருக் கோவிலில்
சங்கர நாராயணனாய் சங்கரன் கோவிலில்
திருவ ரங்கில் பள்ளிகொண்ட அரங்கநாதா.

18. மச்சா வதாரத்தில் நீயங்கு வேதம்காத்தாய்
கூர்மா வதாரத்தில் ஹரனது திருவடிதேடினாய்
வராஹ வதாரத்தில் சீர்மிக்க புவிசுமந்தாய்
பாம்பணை யில்துயில் கொண்ட அரங்கநாதா.

19. நின்ற கோலமாகி வந்த நீர்வண்ணனே
இருந்த கோலமாகி உள்ள நரசிம்மனே
நடந்த கோலமாகி வாழும் உலகளந்தோனே
கிடந்த கோலமாகி அருளும் அரங்கநாதா.

20. வையமே பாயாகி விண்ணே போர்வையாகி
கையள வில்ஏழேழு உலகம் அடக்கி
தன்னு டையதேவர் களின் தலைவனாகி
விண்மீன் கள்ஏவல் செய்யும் அரங்கனாரே.

21. வருணன் அக்கினி அருணன் நிருருதி
குபேரன் வாயு ஈசான தேவரர்
மறைமிகு முனிவர்கள் வேதம் பகர்ந்திட
ன்துயில் கொண்டன் அரங்க னேறே.

22. பூலோக மாளும் கண்ணிய ஈசனே
புவர்லோகம் ஆளும் மண்ணிய வாசனே
திருவைகுந்தம் புகுந்த மேன்மை அரசனே
பரமபத மருளும் பண்புடை அரங்கனே.

23. குடகின் வரையினில் தோன்றிய நற்காவிரி
மதகில் படர்ந்திடும் நீரின் கரைதனில்
நெடுஞ்சுவர் மதிள்சூழ் திருவரங் கத்தினில்
என்றும் உறையும் சீலர் அரங்கனே.

24. குழலூதும் கண்ணா நீபக்தி மூர்த்தி
எழிலானாய் நீலமேகம் சாந்த மூர்த்தி
நெடுந்துயிலில் கிடக்கின்ற கார் மூர்த்தி
மடுவளைவில் அரவணை யில்அரங்க நாதா.

25. நினைப் பெல்லாம் எப்பொழுதும் நின்நாமந்தானே
புனைப் பெல்லாம் நின்னுடைய புகழ்ஆரந்தானே
கண்டோர்க்கும் மண்ணோர்க்கும் பொற் கவசமாகி
விண்ணோர்கள் தொழுதேத்தும் அரங்க நாதா.

26. மதிப்போர்க்கு வில்லேந்தி காக்கும் ஈசா
துதிப்போர்க்கு அபயமளிக்கும் ஆழிச் சங்கே
வேதியரின் சொல்லோசை மந்திர மாகி
மோகினியாய்ப் பரிமளித்த அரங்க மன்னா.

27. வாமனானாய் திருவடியில் மூன்றடி கேட்டாய்
ராமனாகி திருவடியின் பாதுகையை யீந்தாய்
பாதமலர் கொண்டு அகலிகையின் சாபம்நீக்கி
சீதையாம் குலமகளைக் கைப்பிடித்த அரங்கா.

28. பாஞ்சசன்னிய சங்கெடுத்து போர்க்களத்தில் முழங்கி
வெஞ்சினத பஞ்சவர்கள் தஞ்சமதை அளித்து
தருமத்தை நிலைநாட்ட கண்ணனெனும் உருவால்
மருவின்றி உலகத்தை அருள்கொண்ட அரங்கா.

29. இன்றுசென்று நாளைவர பணிந்திட்ட அரசன்
வென்றுபெற்ற தன்னரசை வீடணனிடம் தந்து
அன்பரெனமன் பதையில் நெடுவாழ்க்கை வாழ
அருள்செய்த கருணைமிகு அரங்க நாதா.

30. பற்றின்றி வாழ்க்கையையே மேன்மேலும் நடத்தி
சொற்றொடரை வகையாகப் பரிந்தளித்து செலுத்தி
கற்றதனை விழுத்தோம்பி மற்றதனில் குறித்து
அயர்ச்சியினை எஞ்ஞான்றும் அருளாத அரங்கா.

31. செயற்கரிய கருமந்தனை இயற்றிடவே இயல்பாய்
முயற்சிதனை அகத்தளித்து சென்மந்தனை சயமாய்
பயிற்சியினை என்னுடனே எப்பொழுதும் அருள்வாய்
அயற்சியினை எஞ்ஞான்றும் ருெளாத அரங்கா.

32. எண்ணிய எண்ணத்தில் ஓர்கருத்தாய் உறைபவன்
நுண்ணிய பண்பின் மேற்குலத் தோன்றல்
மண்ணிய உயிர்களின் உயிராய் விளங்கும்
துண்ணிய செயல்களில் உட்கருத்தாம் அரங்கா.

33. கஜமுக கயேந்திரனுக்கு நற்கதி கொடுத்து
புஜச்சக் கரத்தாழ்வானைக் கரத்தில் தாங்கி
பஜகோவிந் தத்தில்சனன மரணம் சதமாக
நிஜமதைப் பார்த்தனுக்கு அருளிய அரங்கா.

34. ஆழ்கடலில் சேதுவினை அமைத்ததொரு நாமம்
பாழ்விதியை மாந்தரிடம் இயற்றுகின்ற நாமம்
ஊழ்வினையை மாற்றிடவே செய்கின்ற நாமம்
கோள்பணியை செவ்வனே இயற்றிடும் திருவரங்கா.

35. மேல்கோட்டை மலைதன்னில் யோகியாய் அமர்ந்து
நாற்கரங்கள் கொண்டசிம்ம முக மூர்த்தி
யோகநரசிம்ம னெனபெயர் பெற்று விளங்கும்
மேகமென கருநிறம் கொண்டதிரு வரங்கா.

36. தயரதனின் திருச்சபை யில்விசுவ முனிகேட்க
பயமறியா சிறுவரென இலக்குவன் கேட்க
சயராமனா கநீவேள்வி யினைக் காத்தாய்
நியமமென எமையாளும் திருவரங்கத் தேவே.

37. மாயமான் காட்டி சீதையினைக் கவர்ந்த
மேயகோன் இலங்கை வேந்தனைச் செயித்த
பகலவன் மைந்தன் மந்திகளின் அரசன்
புகலினைப் பெற்ற அரங்கத் தேரே.

38. கோதண்ட ராமனாய் ஓரம்பு கொண்டு
மாதண்ட நாயகனாய் தீவினையை அழித்து
சேல்கொண்ட சேயாய் கோகுலத்தில் உதித்த
பாற்கடலில் பள்ளிகொண்ட அரங்க மாவேந்தே.

39. ஒருநாளில் திருவாயால் உலகம் காட்டினாய்
ஒருநாளில் விசுவரூப காட்சி கொடுத்தாய்
ஒருநாளில் அர்ச்சுனனுக்குக் கீதை ஓதினாய்
எந்நாளும் அடியவரைக் காக்கும் அரங்கா.

40. தாயும்நீ தந்தையும்நீ குருவும் ஆனாய்
சேயான எந்தனுக்குத் திருக்காப்பு ஆனாய்
மனதளவில் பேறுபெற்ற தெய்வம் ஆனாய்
திருக்கோட்டி யூர்உறங்கும் அரங்க நாதா.

41. முப்பத்து முக்கோடி தேவர் களும்
அறுபத்து முக்கோடி அசுரர் களும்
தன்னுணர் வால்உன் னையேஅனு தினமும்
துதிசெய்யும் பேறுபெற்றாய் அரங்க நாதா.

42. சுட்டெரிக்கும் பகலவனைக் கரத்திலே பிடித்த
புத்தியிலே உத்தமனாம் அனுமன்உனை தினமும்
சப்பாள ஒலிகொண்டு பாசுரங்கள் பாடும்
முப்பால் உலகோர்க்கு அருளாளும் அரங்கா.

43. தியானநூற் கோவைகொண்டு நின்னடி போற்றி
மாயவனாம் திருக்கண்ணன் பாதம் போற்றி
பாவியேன் இம்மையிலே சிறுமை பெற்று
மேவினேன் நின்பாதம் அரங்கத் தம்மானே.

44. பார்போற்றும் கண்ணுதலே வில்லே யாகும்
மார்பாயும் பட்டாடை விண்ணே யாகும்
தார்சுமந்த திருத் துழாய்பரி வட்டத்தில்
சீர்மிக்க செல்வங்கள் சேகர மானாய்.

45. பங்கயம் வளரும் செங்கழுநீர்ப் பொய்கை
அங்கையில் பாசாங் குசமும் சங்கமும்ஏந்தி
மங்கையர் சூழ பாசுரம் பாடி
செங்கோல் ஏந்திய மண்ணுல கரசே.

46. மேலாடை பட்டும் பெருமைஉத் தரீயமும்
மார்புபூண் நூலும் நெடுந்தோள் வரையும்
உதரஒட் டியாணமும் கணுக்கால் சிலம்பும்
மண்மேல் ஒளிர்ந்த விண்ணோர் ஏறே.

47. இராமன் இலக்குவன் பரதசத் ருக்கனன்
ஆதிசேடன் கருடன் அனுமன் குபேரன்
இறையம்ச பண்பும் மறைநூல் பெருமை
யாவும் சேர்ந்த அனந்த பதுமனே.

48. சகடச் சக்கரம் எத்துணைக் காப்பு
ஆழ்கடல் சங்கு நின்பெருமைக் கேப்பு
கலைமகள் புவிமகள் நின்பாதம் பணிந்திட
அங்கைப் பங்கயம் பற்றினேன் நானே.

49. ஆயிரம் கரத்தினன் வேண்டிய தருள்பவன்
பாயிரம் பலமுறை பாடியே வணங்குதும்
பொன்செய் நம்பிஎன் அரங்கத் தலைவன்
என்செய் வேனினி நின்திருவடி யருள்பெற.

50. கரியமால் நின்கைத் தலம்சிக் கெனப்பிடித்து
நெடியமால் நின்திரு வடிபாதம் சேவித்து
கமலக்கண் ணன்நின் னன்புபத மலர்
சேவைசெய் யுமேபக் தர்நெஞ் சமே.

51. கள்ளழகர் சோலைதனில் விளங்கும் ஸ்ரீதரனே
மெள்ளவரு தேனருவி சுனைதனில் அருவியே
உன்னெழிலில் நான்மயங்கி எப்போதும் நிற்கும்
தன்மைதனை வரமருள் வேண்டுகிறேன் அரங்கா.

52. வச்சிரக்கிரீடம் நினக்குப் பெருமை சேர்க்கும்
பூச்சரக்காப்பு உனக்குப் பொலிவு அளிக்கும்
சங்குசக்கரம் கட்ககதை சார்ங்கம் என
பங்சஆயுதம் எனப்பரி மளித்த ரங்கமன்னா.

53. பரமானந்தப் பொருளாகி நான்வேத சொரூபமாகி
வரமருளும் மூர்த்தியாகி பார்போற்றும் கடவுளாகி
பாம்பணையில் அமைதியாக பரலோகம் காக்கின்ற
எம்பார்தம் கோனேமேன்மை தரும் ரங்கநாதா.

54. அன்பும் பண்பும் மேல்குணத்து சீலநே
நான்கு வேதம் பரிவுடனே ஏத்துமே
மேலும் மேலும் பாட்டில் புகழவே
அரங்கனே நியெனது தெய்வமே யானாய்.

55. எழுமலை வரையுடன் கொண்டல் சூழ
மழுவுடன் திருமால் மாலை மேவ
வேங்கடத் திருமலை முகட்டினில் வாழும்
அரங்கனே முருகன் அம்மனின் சோதனே.

56. நீலமேகச் யாமள வர்ண ரூபனாய்
மாலரங்க மன்னன் மதிய பாலனாய்
நாவினன்பு சுவை மிகுந்த சொல்லனாய்
மேவினான் நெடிய நீண்ட மெய்யையே.

57. திருப்பாற்கடல் அலை மேவும் மேனியன்
திருவரங்கத் தீவினில் உறை மார்பினன்
கமலக்கண் ணினான் செவ்வரி விழியினான்
அமலர்அன் பினால் அருள் வேண்டினான்.

58. எந்நாளும் துயிலினன் அரங்கத் தாழ்வான்
பன்னாளும் புகழ்மாலை சூடும் தோளினான்
திருமகள் உடனுறை பரந்த மார்பினன்
நிலமகள் பதங்களை வருடத் தோன்றினன்.

59. அரங்கனே நீயே யமரருள் பெரியவன்
மூவுலகம் போற்றும் பரிபுர நம்பியே
துயிலுடன் சராசரம் புரக்கும் கருணையே
எங்கனே ஏத்துவேன் புவிதனில் நானே.

60. மன்பதை போற்றும் மாதவன் நின்னருள்
கண்மணி காப்புதும் என்னுடன் வந்திட
அன்புடன் நானுன் பாதம் பணிந்திட
சங்கடம் தீர்த்திடும் சக்தியும் பெருகுமே.

61. புண்பட்டவர் வினையறுக்கும் அரங்க வேந்தனே
பண்பட்டவர் மனதில்நிற்கும் காரமேக வண்ணா
நலியறுக்கும் கடவுளாய் எல்லோ ருக்கும்
கலியுலகில் மேன்மேலும் அருள் செய்வாயே.

62. புடம்சூழ் பொன்போல் ஒளிர்திரு மார்பன்
தடந்தோள் வரைவின் பொருப்பில் வாழும்
வேங்கடத் தானருள் புவியில் விளங்க
மாதவம் செய்ய வேண்டுமே நரனே.

63. எட்டுத் திக்கிலே சுடரொளி பரப்பி
ஏழுசன் மங்களில் அறிவொளி நிரப்பி
பார்போற் றியபாலன் கிருட்டிண பகவான்
கூர்மதி யால்தருமம் உலகில் உய்யுமே.

64. திருக்குவளை மலர்போல ஆயிரம் கண்கள்
பொருப்பனைய வச்சிரத்தின் ஆயிரம் தோள்கள்
ஆழிசூழ் உலகமுற்றும் காத்து போற்றி
ஊழிநாள் வரும்போது மேவிக் காப்பான்.

65. வையத்து வாழ்வார்கள் எல்லாம் துணை
பையரவின் மெய்மேல் துயிலும் ஈசன்
பொய்ம்மை நிறைந்த இவ்வுலக வாழ்க்கை
மெய்ம்மை யேநீகாட் டும்மார்க் கந்தானே.

66. காக்கும் கடவுளாம் வையத்தில் திருமால்
நோக்கும் திசையெங் கும்அவன் கைக்கருணை
நான்முக பிரம்மனோ அவன்நாபிக் கமலம்
சொல்நான்கு அருள்மொ ழியேவேதந் தானே.

67. பேரின்ப பெருமைதனை அருளும் திருமகளும்
நேரிழையர் பொறுமைகுணம் அருளும் நிலமகளும்
பண்புள்ள முனிசீலர் போற்றும் சொல்மாலை
கண்ணின் இமையெனவே காக்கும் திருமாலே.

68. நூற்றியெட்டு தலங்களில் நீபேறு பெற்றாய்
நூற்றியெட்டு பாக்களில் நீபேரு கொண்டாய்
ஒன்பதொடு பன்னிரன்டு நூற்றி யெட்டாக
துன்பங்களை சம்காரம் செய்யும் மூர்த்தி.

69. திருமந்திரம் எனவிளங்கும் எட்டெழுத்து மந்திரம்
மருந்தாகும் ஓம்நமோநாரா யணா மந்திரம்
பிறந்தோர்க்கு மறுபிறவி அறுக்கும் திருமந்திரம்
ஓம்எனும் பிரணவமாகிய திருமால் அவனே.

70. மெய்ஞ்ஞானம் தனையருளும் மழைமேக வண்ணா
பொய்ஞ்ஞானம் எந்நாளும் யாருக்கும் உதவா
விய்ஞ்ஞானம் தனைநோக்க கல்விதரும் ஐயா
அய்ஞ்ஞானம் வெகுவிரைவில் களைந்திட நீயருள்வாய்.

71. எட்டெழுத்தில் பட்ட பாவம் சுட்டுப்போகும்
மற்றதொரு இறைநாமம் ஈடுஇணை யில்லை
பிரகலாத பாலனுக்கு தூணில் துகளில்
திருக்காட்சி யளித் திட்ட நாராயணா.

72. மாயனே தூயனே எனை யாண்ட
மெய்யனே கருணைபுரி அய்யனே நீ
எந்நாளும் உன்னையே நான் துதிக்க
கருணையுடன் நீ யருள்வாய் அரங்கநாதா.

73. படியளப்பான் உலகத்தின் உயிர் களுக்கே
மடிநேரில் பாரோர்க்கு அபய மளித்து
மதியளவில் சான்றோரின் பதச் சொல்லாகி
விதியளிக்கும் வீழ்ச்சிகளை விலக்கச் செய்வாய்.

74. அன்பெல்லாம் பல்லுயிரின் நன்மைக் காக
பண்பெல்லாம் நல்லுயிரின் ஏற்றத் திற்கே
கடைக்கண்ணால் உயிர்களை நீஓம்பிக் காத்து
துடைத்தெறிவாய் இடுக்கணை எந் நாளுமே.

75. தினையளவு ஒருவர்க்கு உதவி செய்தால்
பனையளவு மலைபோல எண்ணிப் போற்றி
பரலோகம் அரசயோகம் தந்து காக்கும்
அரங்கநாதன் பெருமைதனை என்னென் பேனே.

76. பரமபத மருளும் திருவரங்க னெனும் அரசே
பரிபூரண குணமுடைய வையாபுரித் திருவே
தனமளிக்கும் வைகுந்தபுரி யருளும் பண்பே
மனமென்னும் சிவிகைதனில் சுமக்க நீயருளே.

77. செந்நெல்விளை மதகால்சூழ் அழகியதிரு வரங்கம்
மன்னர்மதி யோர்கள் தொழுதேத்தும் திருவரங்கா
உன்னால்உல கோர்க்குஎப் பொழுதும்திருக் காப்பு
என்னால்உனை தினந்தோறும் துதிபாடிட அருள்வாய்.

78. அரவணையில் அன்புள்ளம் நீயே கொண்டாய்
மரவுரியில் சீதையுடன் கானகம் சென்றாய்
அறிவுரைகூறி பாரதப் போரில் விசயனுக்கு
பார்புதையல் கீதை யெனும்வேதம் நீயீந்தாய்.

79. அரக்கர்தம் சேனையினை அழித்த தொருகாலம்
அமிழ்ந்தபூ உலகத்தைக் கொணர்ந்த தொருகாலம்
சிவதனுசுதனை முறித்து மணந்ததொரு காலம்
பவண்மனதை அபகரித்த மால்என்னும் தலைவா.

80. பொன்வேண்டேன் பொருள் வேண்டேன் அருளாழி
மண்வேண்டேன் பெண் வேண்டேன் சுடராழி
எண்திக்கும் கோலோச்சும் இறைவன் எளியன்
என்பொருட்டு தயைசெய்ய அருள் செய்வாயே.

81. மிதிலைநகர் வீதியில் இலக்குவன் தன்னுடனே
குதலைமொழி பேசி விசுவமுனி ஆணையுடன்
சிவதனுசை எடுத்து நாண்ஒலி எழுப்பி
புவிமகளை மணந்த தாசரதி இராமா.

82. வாயு புத்திரன் அஞ்கனை மைந்தன்
பாயும் புலியென வானிலே விரைந்து
விசுவ ரூபமாய் ஆழியைக் கடந்து
பணித்த மன்னா இராமா திருஇராமா.

83. பிறவிக் கடலைக் கடக்கத் தோணியாய்
உறவினை யறுத்து உள்ளொளி விளக்கி
நெறிதரும் முறையை உலகமாந் தர்க்கு
குறிதரும் வகையாய்க் குகனைக் காட்டினாய்.

84. தந்தையின் வாக்கினால் தாயினை நசித்தாய்
தந்தையின் வாக்கினால் கானகம் புகுந்தாய்
தந்தையின் தலைசுமை யாககோ குலத்தில்
நள்ளிரவில் புகுந்த செம்மனச் செம்மலே.

85. பதினான்கு வருடம் கானகஞ்சேர் ரகுவரன்
ஏகபத்தினி விரதத் தலைமகன் ஆழிசூழ்
உலகம் சுமந்து மண்ணைக் காத்த
விண்ணோர் அரசே வராக மூர்த்தியே.

86. வேடன்குகன் அன்புதனில் பாசம் கொண்டாய்
மாடமாளிகை சுகந்தன்னை விட்டு ஒழித்தாய்
தருமத்தை நிலைநாட்ட நீவில் லேந்தி
கருமத்தைப் போதித்தாய் நீசோ தியாக.

87. களிறுபிடி கூட்டமென எங்கெங்கும் ஓடும்
தளிர்பச்சை மலர்களும் தண்பொய்கை நீரும்
புளிமருதம் அரவுகளும் பனிவீழும் பொருப்பும்
மலிந்திருக் கும்தண் டகாவனத்தில் நீநடந்தாய்.

88. வேடன்குகன் அன்பனையும் தம்பியாக் கினாய்
சுக்கிரீவன் அரசனையும் தம்பியாக் கினாய்
வீடணனையும் நீஒரு தம்பியாக் கினாய்
சுந்தரன் அனுமனால் அன்பு பூண்டாய்.

89. பகலில்லை இரவில்லை நீரில்லை வானில்லை
இகமில்லை பரமில்லை சுவரில்லை புவரில்லை
வில்லில்லை வானில்லை நரசிங்க மூர்த்தியாகி
கரங்களால் அசுரன்தனை சம்கரித்த மூர்த்தி.

90. மறுபிறப்பு இலாதநிலை அருள்கின்ற தேவா
பிறப்பறுக்கும் உபாயமதை இயம்பும் திருமாலே
நவநீதகிருஷ் ணனென விருந்தா வனத்தில்
பவமாக குழலூதும் நவரத்ன மணியே.

91. தேர்மேல் நின்று பார்த்தனின் விசனத்தை
கூர்மேல் கொண்டு விளக்கி விவரித்து
பந்தம் சொந்தம் உறவுதுற வெல்லாம்
நொந்தும் நீர்க்குமிழி வாழ்க்கை யென்றாய்.

92. படமெடுத்த காளிங்க அரவின்மேல் நடனம்
திடமருங்கும் கோவர்த்தன பொருப்பென் னும்குடையை
கைக்கொண்டு நடனம்புரி நளினசுந்தர உருவம்
மைக்கொண்ட களிநுதலின் நோக்கென்னும் அருளே.

93. உன்னோடு பீடுடைய வேல்மங்கை விழியார்
என்னாளும் ஆடியும் பாடியும்பக்தி செய்வார்
புன்னகையில் நிலவுலகம் ஆள்கின்ற நீயே
கண்கண்ட கடவுளாம் கண்ணனெனும் சேயே.

94. திருமலையில் பக்தர்களின் கண்கண்ட தெய்வம்
கருவண்ணன் குழலூத எழில்மங்கை குழமாம்
பிருந்தவனம் தனிலாட கோதையர்கள் பாட
இருந்தபடி ஏழேழு உலகங்கள் ஆள்வான்.

95. இரவித் தோன்றல் கோள்களின் அரசன்
புரவிக் கடிவளம் கைகளில் ஏந்தி
கண்டீபம் சங்கினை உரக்க ஒலித்த
கண்ண னாகிய அரங்கத் தம்மானே.

96. சீர்மிகு மன்னவர்குடி இராசகோ பாலனாகி
பார்மிகு பண்பவர்மிகு குடந்தை பாணி
இராம நாதன்போற்றிய இரகு நாதன்
அரங்க நாதன் புகழ்பாடும் புவிமாக்களே.

97. திருவையா யாவூரில் மாண்புமிகு வாசுதேவனாய்
குருவாயூர் திருநகரில் ஆதிகேச வனாய்
வையமளந்த வடிவுடைய இருடி கேசனாய்
பையரவின் படம்மிகுந்த அரங்க ஈசனே.

98. திருமெய் யத்தில் திருசத்திய மூர்த்தியாகி
திருக்கோ விலூரில் உலகளந்த விக்ரமூர்த்தியாகி
திருவல்லிக் கேணியில் பார்த்தனுக்கு சாரதியான
திருக்கண்ண புரத்தின் திருசௌரி யரசனே.

99. திருவனந்த புரிதன்னில் அனந்த பதுமனாகி
திருவட்டார் மணிபுரியில் திவ்விய தேவனாய்
திருக்கொள் ளிடந்தீரந்தன்னில் புருடோத்தமனாய்
திருவருளை நவில்கின்ற அரஙகத் தானே.

100. தான்தோன்றி மலைதன்னில் அருள்புரி வெங்கடேசா
வான்முகடு எட்டுகின்ற திருமலை ஸ்ரீனிவாஸா
தாணுமால் அயனான சுசீந்திரத் திருவே
ஆழ்வார்கள் துதிபாடி தொழுதேத்திய தேவா.

101. சித்தமதில் திளைத்திருக்கும் பரமானந்த குருவே
பத்தமடை திருவூரில் நிந்துறையும் பரமே
திருமழிசை நகர்தன்னில் தவமிருந்த தேவே
பரம்பொருளாய் அருள்கின்ற பக்தர்களின் கோவே.

102. மதுராந்தக மதிநகரில் ஏரிகாத்த இராமா
மதுரபுரி மன்னார்குடி வாழும் இராசகோபாலா
வடுவூரில் எழில்மேவும் வில்லாளி வீரா
தில்லைவி ளாகத்தில் நீசுந்தர மாய்நின்றாய்.

103. நாகலாபுரந் தன்னில் மச்சாவதார மூர்த்தி
திருமுஷ்ணந் தன்னில் அவன்வராக மூர்த்தி
கூர்மபுரி தன்னில் அவன்கூர்ம மூர்த்தி
கேரளத்திரு மண்ணில் பரசுராம மூர்த்தி.

104. திருக்கோட்டி மாநகரில் சௌம்ய மூர்த்தி
திருஅதம்பார் மணித்தலத்தில் இராம மூர்த்தி
திருஅரங்கத் தீவுதனில் அரங்க மூர்த்தி
உடுப்பிதிருத் தலத்தில் அவனகிருஷ்ண மூர்த்தி.

105. திருத்தில்லை சிதம்பரத்தில் கோவிந்த ராசனாய்
திருப்பத்ரிநாத் புரிதன்னில் பத்ரி ஈசனாய்
திருவஹீந்திர புரந்தன்னில் தேவ நாதனாய்
பரஉலகம் அருள்கின்ற பரம மூர்த்தியே.

106. பள்ளிகொண்டா திருநகரில் கிடந்து இருந்தான்
எள்ளிநகை யாடுவோர்க்கு இடுக்கண் தந்தான்
பாவியேன் என்சிந்தை யிலேஎஞ் ஞான்றும்
மேவிநின்று அருள்செய்யும் கருணா மூர்த்தி.

107. நூல்வளம் மேவிய சான்றோர் அருளுரை
சால்புசார் பட்டினைப் போர்த்திய வேந்தனாய்
சுந்தர ரூபனாம் அரங்கத் திருமகன்
அந்தர லோகம் போற்றம்திரு மூர்த்தியே.

108. சடகோபன் அனுதினமும் துதிபாடும் வேந்தே
படமெடுக்கும் அரவின் நிழல்சாரங்க பாணி
சுந்தரனாம் அனுமன் உனையேத்தியே துதிக்க
மந்திரமூர்த்தி என்னாளும் எனைக்காக்கும் அரங்கா.

இந்த 108 பாசுரங்களை அனுதினமும் மனமொன்றி பகன்றால் சங்கு சக்ரபாணியாக அரங்கன் அரவணைத்து முக்திதனைத் தருவான் என்பது திண்ணம். கோதண்ட பாணியாக ஸ்ரீராமனையும். யதுகுல ஸ்ரேஷ்டரான ஸ்ரீகிருஷ்ணனையும் பரிபூரணமாகப் பிரார்த்தனை செய்யலாம் என்று அடியேன் பணிவன்புடன் சமர்ப்பிக்கிறேன்.

ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி.

வனமாலி கதிசார்ங்கீ சங்கி சக்ரீகி நந்தகீ
ஸ்ரீமன் நாராயணோ விஷ்ணு வாசுதேவோ அபிரக்ஷது.

**பரிதிமதி**

## ஆசிரியர் குறிப்பு

இந்த கவிதைப்படைப்பு பேராசிரியர். முனைவர். இரா. இரவிச்சந்திரன் முதன்முதலாக எழுதிய தமிழ்க் கவிதைத் தொகுப்பாகும். அரங்க நாதனே அவர் மனதில் தோன்றி 2003ம் வருடம் எழுதப் பட்டவை. ஆசிரியர் 'பரிதிமதி' பக்தி ததும்பும் பாடல்களை ஸ்ரீபெரியாண்டவர் பாமாலை, அண்டத்தின் பேரருள் அரனாரின் திருவருள், பிள்ளையார்பட்டி கற்பக விநாயகர் மணிமாலை, அஞ்சனை மைந்தன் பாமாலை, திருமுருகன் பாமாலை, என்ற படைப்புகள் மூலம் மக்களுக்கு அருளியிருக்கிறார். அனைவரும் இந்த பாடல்களைத் தினந்தோறும் படிக்க வேண்டும் என்று வேண்டிக் கொள்கிறார்.

**ஆசிரியர் முகவரி:**
Prof.Dr. R.Ravichandran,
F101, Ram Adithya Apartments,
19/6 Nagappa Street.
Pipeline A Cross. Malleswaram,
Bangalore-560 003. Email. ravichandranrama@rediffmail.com